# குளித்தலை நகராட்சி

30.11.2018.ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அக்டோபர்–2018 மற்றும் நவம்பர்–2018.ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர்–2018 மற்றும் நவம்பர்–2018.ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–03. குளித்தலை நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் 3 இனங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 10.09.2018.ல் கோரப்பட்டது. அதில் பயோமைனிங் முறையில் குப்பைகள் அகற்றும் பணிக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிக்ள் வரப்பெறவில்லை. மேற்படி பணிக்கு மட்டும் இரண்டாம் ஒப்பந்தப்புள்ளி 12.10.2018 தேதியில் நடைபெறுவதன் விளம்பரம் செய்யப்பட்டதன் அக்கார்ட் ஏஜென்சிஸ் விளம்பர கட்டண தொகை ரூ.1,53,563/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியில் இருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1389/2018/இ1)

பொருள்–04. குளித்தலை நகராட்சி கல்மண்டப பிரிவு வாய்க்கால் பகுதியில் தடுப்பு சுவர் கட்டும் பணி ரூ.4.50 லட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019.ல் மேற்கொள்ள, ந.க.எண்.அ3/3585/2018, நாள்–16.10.2018.ல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2466/2018/இ1)

பொருள்–05. குளித்தலை நகராட்சியின் நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், சேலம் அலுவலகத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கும்பணி, உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.1.00 லட்சம் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையரக செயல்முறைகள் ந.க.எண்.18264/18தி2–2, நாள்–31.10.2018.ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு ரூ.1.00 லட்சம் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4014/2018/இ1)

பொருள்–06. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கையாக இந்நகராட்சிக்குட்பட்ட குடியிருப்பு வீடுகளில் டெங்கு கொசுபுழு ஒழிப்பதற்கு 2018–2019.ஆம் ஆண்டுக்கு டெங்கு கொசுபுழு மருந்து 100 லிட்டர் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திலிருந்து வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4126/2018/எச்1)

..2..

பொருள்– 07. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.அ.வ.சையத் முஸ்தபா கமால் அவர்கள், அலுவலக பணி நிமித்தமாக கீழ்க்கண்டவாறு வெளியூர் சென்றுவந்தமைக்கு பயணப்படி தொகை ரூ.11,860/– வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பயண தேதி | பயண ஊர் | பயணத்தின் காரணம் | பயணபட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1) | 12.10.2018 | சென்னை | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில், குப்பைகளை கையாளுவது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டது. | 2630.00 |
| 2) | 22.10.2018 முதல் 27.10.2018 வரை | ஐதராபாத் | Integrated Capacity Building under CBUD of ULBs Training at Engineering Staff College of India, Hyderabad | 6600.00 |
| 3) | 01.11.2018 | சென்னை | CMA Review Meeting, CMA Office, Chennai | 2630.00 |
| | | | மொத்தம் | 11860.00 |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1245/2018/அ1)

பொருள்– 08. தமிழ்நாடு அரசு மானியக் கோரிக்கை எண்.34/2018–19, அறிவிப்பு எண்.14 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17018/2018/குவ–1, நாள். 23.08.18 ல் தெரிவித்துள்ளபடியும் குளித்தலை நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கி குடிநீர் மையம் (Automatic Vending Machine ) ஒன்றுக்கு ரூ.18.00 இலட்சம் வீதம் 24 வார்டுகளுக்கும் 24 மையங்களுக்கு மதிப்பீடு ரூ. 432.00 இலட்சங்களில் அமைக்க (DBFOT) Design, Build, Finance, Operate and Transfer அடிப்படையின் கீழ் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு Expression of interest (EOI) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவ மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**நிபந்தனைகள்:**</u>

1. குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அனைத்து வார்டுகளிலும் ஒரு இடம் நகராட்சி மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நீர் ஆதாரம் நகராட்சி மூலம் ஏற்படுத்த வேண்டும்.
2. Expression of interest (EOI) கோரும் நிறுவனம் கார்ப்ரேட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership CSR and Other Funds) நிதியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து கொள்ள வேண்டும். மேலும் அதன் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி அந்நிறுவனமே மேற்கொள்ள வேண்டும்.
3. Expression of interest (EOI) கோரும் நிறுவனமே மாதாந்திர மின்சார கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
4. Expression of interest (EOI) கோரும் நிறுவனம் குடிநீர் தரத்தை உறுதி செய்து மக்களுக்கு வினியோகம் செய்ய வேண்டும்.
5. இத்திட்டத்தின் மூலம் பயன்பெரும் பயனாளிகளுக்கு E- Cards, Smart Cards, Expression of interest (EOI) கோரும் நிறுவனமே வழங்கி பராமரிக்க வேண்டும்.
6. Expression of interest (EOI) கோரும் நிறுவனம் ஒரு லிட்டர் குடிநீர் ரூ.0.35 பைசா வீதம் 20 லிட்டர் Can ரூ.7.00 என வினியோகிக்கும் போது கேன் ஒன்றுக்கு ரூ.1.00 நகராட்சிக்கு கட்டணமாக செலுத்த வேண்டும்.
7. Expression of interest (EOI) கோரும் நிறுவனம் திட்டம் செயல்படுத்திய 10 ஆண்டுகளுக்கு பின்பு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நல்ல முறையில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.
8. Expression of interest (EOI) கோரும் நிறுவனம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒதுக்கீடு செய்த இடத்திற்கு எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது
9. பொதுமக்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட வேண்டும். தொழிற்சாலைகள் மற்றும் உணவு விடுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யக்கூடாது.

அலுவலக குறிப்பு–வரிசை எண். 1 முதல் 9 வரையிலான நிபந்தனைகளின்படி அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.3114/2018/இ1)

..3..

பொருள்– 09.

குளித்தலை நகராட்சிப் பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019 உரக்கிடங்கில் சேகரிக்கப்பட்டுள்ள 51711 கனமீட்டர் அளவுள்ள குப்பைகளை பயோமைனிங் முறையில் அகற்றுதல் பணிக்கு ரூ.340.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.22866/பி3/2018.ல் நிர்வாக அனுமதி வழங்கியதன்படி, மன்ற தீர்மான எண்.161, நாள்–23.08.2018.ல் அனுமதி பெற்று 12.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 3 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதன் விபரம் கீழ்வருமாறு.

<table>
<tr><th>வ. எண்.</th><th>பணி விபரம்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டு சதவீதம்</th><th>விலை குறைப்புக்கு பின்</th></tr>
<tr><td rowspan="3">1)</td><td rowspan="3">குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் உரக்கிடங்கில் சேகரிக்கப் பட்டுள்ள 51711 கன மீட்டர் அளவுள்ள குப்பைகளை பயோ மைனிங் முறையில் அகற்றுதல்</td><td>1). திரு.ஆர்.சுப்ரமணியன், காளப்பநாயக்கன்பட்டி, நாமக்கல்.</td><td>6.35 % அதிகம்</td><td>4.94 % கூடுதல்</td></tr>
<tr><td>2). M/s.வாலாஜாபேட்டை அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ், வேலூர்.</td><td colspan="2" rowspan="2">தொழில் நுட்ப தகுதியற்றதாக உள்ளது. நிராகரிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>3). சீனிவாசா வேஸ்ட் மெஸர்மெண்ட் சர்விஸஸ் (பி) லிட்., சாலிகிராமம், சென்னை–93.</td></tr>
</table>

மேற்கண்ட திரு.ஆர்.சுப்ரமணியன், ஒப்பந்ததாரரின் தகுதியான ஒப்பந்தப்புள்ளி ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 6.35 % கூடுதலாக இருந்த காரணத்தினால், ஒப்பந்தப்புள்ளியை குறைப்பு செய்து கொடுக்கும்படி (Negotiation), தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ஆர்.சுப்ரமணியன் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்குமாறு 22.10.2018 அன்று இவ்வலுவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சுப்ரமணியன், Excavating and Renoving the legal waste Rs.674.00 / m3 என்ற விகிதத்தில் செய்ய சம்மதித்து விலை குறைவு கடிதம் வழங்கினார். அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில், மதிப்பீட்டுக்கு 5.41 % கூடுதலாக இருந்தது. எனவே, மீண்டும் விலை குறைப்பு செய்துதர கோரி இரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி குறைப்பு செய்துதரக்கோரி கடிதம் 29.10.2018 அன்று ஒப்பந்ததாரருக்கு அனுப்பப்பட்டது. மேற்கண்ட கடிதத்திற்கு, மேற்படி இனத்திற்கு மீள 671.00 / m3 என்ற விகிதத்தில் குறைத்தும், கட்டுமான பொருட்கள், சாலை மற்றும் கட்டிட பணியாளர்கள் கூலி ஆகியவை விலையேற்றம் காரணமாக இனி குறைக்க இயலாது என இறுதிசெய்து பதில் கடிதம் வழங்கியுள்ளார். அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் த்யாரிக்கப்பட்டதில் மதிப்பீட்டுக்கு 4.94 % கூடுதலாக இருந்தது. எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1). நகராட்சி நிர்வாகம், பொறியாளர் கையேடு தொகுதி–I பத்தி 2.7.2 பக்கம் எண்.9.ல், பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விகிதத்திற்கு 5% வரை கூடுதலாக முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பிலேயே வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே திட்ட பணியின் அவசியம் கருதி, கட்டுமான பொருட்கள் விலையேற்றத்தினாலும், கட்டுமான தொழிலாளர்கள் கூலியேற்றத்தினாலும், மதிப்பீட்டிற்கு 4.94% கூடுதலாக வழங்கியுள்ள திரு.ஆர்.சுப்ரமணியன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1389/2018/இ1)

பொருள்– 10.

குளித்தலை நகராட்சியில் அலுவலக கட்டிடம் அமைத்தல் பணி, அண்ணாநகர் பூங்கா, ஜெய்மகால் அவென்யூ (MCC) நுண் உரக்கிடங்கு மையங்கள் அமைத்தல் பணி, சத்தியமங்கலம் உரக்கிடங்கில் கழிவுநீர் மேலாண்மை மற்றும் பயோமைனிங் முறையில் குப்பைகள் அகற்றுதல் பணிகள், அரசு மருத்துவமனை வளாகத்தில் பார்வையாளர், உதவியாளர்கள் தங்குமிடம் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது. மேற்படி இடங்களில் மண்பரிசோதனை திருச்சி தேசிய தொழில்நுட்ப கல்லூரி மூலம் மேற்கொள்ளப்பட்டதன் பட்டியல் தொகை ரூ.2,27,811/– வெஸ்டா பைல் பௌண்டேசன், தஞ்சை நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1). அனுமதி வழங்கலாம்.

2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1804/2017/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி குடிநீர் லாரி TN-47-E-0264.ன் தகுதிசான்று பெறுவதற்கான பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.2.12 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.212, நாள்– 11.10.2018.ல் அனுமதி பெற்று, 16.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி குடிநீர் லாரி TN-47-E-0264.ன் தகுதிசான்று பெறுவதற்கான பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 1). M/s.லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | மதிப்பீட்டிலான சதவீதம் |
| | | 2). M/s.JVK ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சேலம். | 10.47 % அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிலான 0.00 % ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3201/2018/இ1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகள் மற்றும் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக அறிக்கைகள் தயார்செய்ய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு.

| வ. எண். | விபரம் | | நிறுவனம் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1) | புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு PPT Booklet colour 6 எண்ணிக்கை தயார் செய்தது (ந.க.எண்.696/2018/இ1) | | தமிழரசன் கம்ப்யூட்டர்ஸ், 36,பெரியபாலம், குளித்தலை. | 7600.00 |
| 2) | IUDM 2018-2019 தார்சாலை அமைத்தல் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் புகைப்படங்கள் தட்டச்சு செய்து 3 Booklet செய்தது (ந.க.எண்.2251/2018/இ1) | | | 7000.00 |
| 3) | சத்தியமங்கலம் உரக்கிடங்கில் கழிவு கசடுநீர் மேலாண்மை திட்ட பணிக்கு விரிவான திட்ட அறிக்கை 3 எண்ணிக்கையில் புகைப்படங்கள் தயாரித்தது தட்டச்சு உள்பட (ந.க.எண்.1387/2018/இ1) | | | 16800.00 |
| 4) | சத்தியமங்கலம் நவீன உரக்கிடங்கு, குளோரினேசன் பிளாண்ட் மற்றும் பழைய பேருந்து நிலைய அடிப்படை வசதிகள் புகைப்படம் ஏ4 அளவில் 60 எண்ணிக்கை தயாரித்தது (ந.க.எண்.1389/2018/இ1) | | | 3600.00 |
| 5) | அ). குளித்தலை நகராட்சி Zonation Map வரைந்து AO size colour நகல்கள் 12 எண்ணிக்கை தயாரித்தது | 5280.00 | | |
| | ஆ) திரவ குளோரினேசன் இயந்திரம் அமைக்கப்பட்டதன் A4 size புகைப்படம் 12 எண்ணிக்கைகள் தயாரித்தது (ந.க.எண்.2279/2018/இ1) | 720.00 | | |
| | | 6000.00 | | 6000.00 |
| | மொத்தம் | | | 41000.00 |

மேற்கண்ட விபரப்படியான பட்டியல் தொகை ரூ.41,000/–ஐ, தமிழரசன் கம்ப்யூட்டர்ஸ், குளித்தலை நிறுவனத்தாருக்கு வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.696/2018/இ1)

| | |
|---|---|
| பொருள்– 13. | குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கு பகுதியிலான 51711 மீட்டர் பரப்பளவில் உள்ள குப்பைகளை பயோமைனிங் முறையில் அப்புறப்படுத்தப்பட்ட பணி உத்தரவு வழங்கி நடவடிக்கையில் உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகள்படி, மேற்கண்ட பணிகள் நடைபெறுவதை டோர்ன் கேமரா மற்றும் ஸ்டில் கேமரா முலம் புகைப்படங்கள் மற்றும் வீடியோ எடுத்து ஆவணங்கள் (Documentation) செய்துவைக்க வேண்டி உள்ளது. அதற்கான உத்தேச செலவினம் மதிப்பீடு ரூ.30,000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு– | 1). அனுமதி வழங்கலாம்.<br>2). செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3657/2018/இ1) |

*******

# குளித்தலை நகராட்சி

30.11.2018.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 226 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 227 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 228 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 4 | 4 | 229 | பதிவு செய்யப்பட்டது. |
| 5 | 5 | 230 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 231 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 232 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 233 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 9 | 9 | 234 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 10 | 10 | 235 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | 11 | 236 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 237 | பதிவு செய்யப்பட்டது. |
| 13 | 13 | 238 | அனுமதி வழங்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.